# பத்தாம் வகுப்பு

# இயல் 1

# இரட்டுற மொழிதல்

## ஆசிரியர்

### சந்தக்கவிமணி தமிழழகனார்

# இரட்டுற மொழிதல் (PUN)

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல்.
- இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.
- நம் பாடப்பகுதிப் பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.



# சந்தக்கவிமணி தமிழழகனார்

இயற்பெயர்: சண்முக சுந்தரம்

பெற்றோர்: வேலு – வள்ளியம்மை

காலம்: 21.4.1929 – 2.10.2015

ஊர்: தூத்துக்குடி

நூல்கள்: 12 சிற்றிலக்கியங்கள்

விருதுகள்: சந்தக்கவிமணி, கவிமாமணி, பாரதிதாசன் விருது.



## ஆழிக்கு இணை

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்

மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்

அணைகிடந்தே சங்கத் தவர்காக்க  ஆழிக்கு

இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

– *தனிப்பாடல் திரட்டு*






# பாடல் பொருள்

| பாடல் அடிகள் | தமிழுக்கு | கடலுக்கு |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினைஅமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை,கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல் |

# பாடல் பொருள்

தமிழ்: தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

கடல்: கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

# வினாக்கள், செயல்பாடுகள்

1. இரட்டுற மொழிதல் என்றால் என்ன? தமிழழகனார் குறிப்பு எழுதுக.
2. தமிழழகனார் தமிழையும், கடலையும் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

- சிலேடை நயத்தில் அமைந்த பாடல்கள் இரண்டினைக் கண்டறிந்து எழுதி வருக.
- பேச்சு வழக்கில் உள்ள சிலேடைச் சொற்களை வரிசைப் படுத்துக.